யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

FWC

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015
# Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | கணக்கீடு - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

சுட்டெண் :....................................

- *01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*
- *31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.*
- ஒவ்வொரு வினாவும் நான்கு புள்ளிகளை கொண்டதாகும்.
- உங்கள் சுட்டெண்ணை மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் எழுதுக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

01) பின்வருவனவற்றுள் எவை எண்ணக்கரு சட்டகத்தின் படி நிதிக்கூற்றுக்களின் முதன்மை பண்புசார் வகைகள்?

(1) பொருத்தப்பாடு, விளக்கக்கூடிய தன்மை
(2) ஒப்பீட்டுத்தன்மை, காலந்தவறாமை
(3) பொருத்தப்பாடு, காலந்தவறாமை
(4) பொருத்தப்பாடு, உண்மையான பிரதிநிதித்துவம்
(5) பொருத்தப்பாடு, ஒப்பீட்டுத்தன்மை (.......)

02) கீழே தரப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பகுதிகளில் எது / எவை குறித்த காலத்திற்காகத் தயாரிக்கப்படுகின்றன?

A - உரிமையாண்மையில் எழும் மாற்றங்களைக் காட்டும் கூற்று
B - காசுப்பாய்ச்சல் கூற்று
C - கணக்குகளுக்கான குறிப்புக்கள்

(1) A மாத்திரம் (2) B மாத்திரம்
(3) A, B ஆகியன மாத்திரம் (4) A, C ஆகியன மாத்திரம்
(5) A, B, C ஆகியன மாத்திரம் (.......)

03) தனி வியாபாரமொன்று 2015.07.31 இல் முடிவுற்ற மாதத்திற்கான ஊழியரின் மாதச் சம்பளம் ரூபா 25000 இற்கு பதிலாக ரூபா 22500 கிரயமான பண்டங்களை வழங்கியது. கீழே தரப்பட்டுள்ள சமன்பாடுகளில் எது மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தைக் காட்டுகின்றது.

| | சொத்துக்கள் = | பொறுப்புக்கள் + | உரிமையாண்மை |
|---|---|---|---|
| (1) | −25 000 | | −25 000 |
| (2) | −22 500 | | −22 500 |
| (3) | −22 500 | +2 500 | +22 500 |
| (4) | −22 500 | −2 500 | −25 000 |
| (5) | −25 000 | +2 500 | +25 000 |

(.......)

04) நிறுவனம் ஒன்று ரூபா 400 000 பெறுமதியான பொருட்களைக் கடனுக்கு கொள்வனவு செய்தது. இவைகளுள் ரூபா 60 000 பெறுமதியான பொருட்களை அவை குறித்த விபரங்களுக்கு அமையாமையினால் விநியோகஸ்தருக்கு திருப்பி அனுப்பியது. பின்னர் நிறுவனம் மிகுதித் தொகையை தீர்ப்பதற்கு பணம் செலுத்தியது. இக்கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்குத் தேவையான மூல ஆவணங்களின் வரிசை முறை பின்வருவனவற்றுள் எது?

(1) பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு
(2) பட்டியல், வரவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(3) பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு
(4) பட்டியல், செலவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(5) பட்டியல், நாட்குறிப்பு உறுதிச்சீட்டு, பற்றுச்சீட்டு (.......)

05) நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மற்றும் சமர்ப்பித்தல் சட்டகத்திற்கமைய நிதிக்கூற்றுக்களின் அடிப்படை எடுகோள் எது?

(1) அலகுசார் (2) அட்டுறு (3) தொடர்ந்து இயங்குதல்
(4) இணைதல் (5) தேறல் (.......)

06) நிறுவனமொன்று 2015.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் தகவல்களை வழங்குகின்றது.

| | ரூபா |
|---|---|
| வருடத்திற்கான இலாபம் | 140 000 |
| அறிமுகப்படுத்திய புதிய மூலதனம் | 150 000 |
| பற்றுக்கள் | 30 000 |
| மொத்தச் சொத்துக்களின் அதிகரிப்பு | 80 000 |

2015.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்தப் பொறுப்புக்களில் காணப்படும் குறைவு

(1) ரூபா 80 000 (2) ரூபா 140 000 (3) ரூபா 180 000
(4) ரூபா 220 000 (5) ரூபா 230 000 (.......)

07) இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 16 இன்படி ஆதனம், பொறி மற்றும் உபகரணம் போன்ற சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தில் மாற்றம் என்பது

(1) கணக்கீட்டு கொள்கையில் எழும் மாற்றம்
(2) கணக்கீட்டு மதிப்பீட்டில் மாற்றம்
(3) ஒரு பிழையான மாற்றம்
(4) பெறுமானத் தேய்விடல் முறையில் ஏற்படும் மாற்றம்
(5) நிதிக் கூற்றுக்களுக்கான முன்னோக்கிய சீராக்கல் (.......)

08) கிங்ஸ் அச்சகம் வெளிநாட்டிலிருந்து ஒரு புதிய அச்சுப் பொறியை வாங்கியது. இப் பொறியினால் பின்வரும் கிரயங்கள் எழுந்தன.

| | | |
|---|---|---|
| பொறிக்கிரயம் | ரூபா | 1 000 000 |
| போக்குவரத்துச் செலவு (துறைமுகத்திலிருந்து) | ரூபா | 200 000 |
| பொருத்துதல் செலவு | ரூபா | 150 000 |
| பொறியினை இயக்குவதற்கு முன்பான பரீட்சார்த்த இயக்கத்திற்காக எழுந்த கிரயம் | ரூபா | 80 000 |

பரீட்சார்த்த இயக்கத்தின் போது அச்சடிக்கப்பட்டவை ரூபா 30 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.

(1) ரூபா 1430 000 (2) ரூபா 1350 000 (3) ரூபா 1400 000
(4) ரூபா 1200 000 (5) ரூபா 1230 000 (.......)

09) வரையறுத்த ரகு நிறுவனத்தின் அறவிடமுடியாக் கடன், ஐயக்கடனிற்கான ஏற்பாடு ஆகியவற்றின் மீதிகள் பின்வருமாறு

| | 31.03.2015 இலுள்ளபடி | 31.03.2014 இலுள்ளபடி |
|---|---|---|
| அறவிடமுடியாக்கடன் | 50 000 | 40 000 |
| ஐயக்கடனிற்கான ஏற்றுமதி ஏற்பாடு | 15 000 | 18 000 |

31.03.2015 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கில் அறவிட வேண்டிய அறவிடமுடியாக்கடன், ஐயக்கடன் என்பவற்றின் பெறுமதி யாது?

(1) ரூபா 13 000 (2) ரூபா 7 000 (3) ரூபா 65 000

(4) ரூபா 53 000 (5) ரூபா 47 000 (.......)

10) விற்பனைத் தரகு பிழையாக விற்பனைக் கணக்கில் வரவிலிடப்பட்டிருப்பின், பின்வருவன வற்றுள் எது குறைவாகக் காட்டப்பட்டிருக்கும்.

(1) மொத்தலாபம்
(2) வருடத்திற்கான இலாபம்
(3) கடன்பட்டோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட காசு
(4) உரிமையாண்மை
(5) விற்பனைக் கிரயம் (.......)

11) மூலதனமாக்கலால் ஐந்தொகை மீதான தாக்கம் பின்வருவனவற்றுள் எது?

(1) சொத்துக்கள், உரிமை மூலதனம் இரண்டும் அதிகரிக்கும்
(2) சொத்துக்கள், உரிமை மூலதனம் இரண்டும் குறையும்
(3) பொறுப்புக்கள் குறையும் உரிமை மூலதனம் அதிகரிக்கும்
(4) சொத்துக்கள், குறையும் உரிமை மூலதனம் அதிகரிக்கும்
(5) சொத்துக்கள், உரிமை மூலதனம் இரண்டிலும் மாற்றம் எதுவும் ஏற்படாது (.......)

12) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களில் எக்கூற்றானது சரியானதாகும்?

(1) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கொன்றில் செலவு மீதியொன்று இருக்க முடியாது.
(2) சகல கடன்பட்டோர் தொடர்பிலும் கட்டுப்பாட்டுக் கணக்கொன்று பேணப்பட வேண்டும்.
(3) விற்பனை நாளேட்டின் மொத்தமானது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படும்.
(4) சகல விற்பனைகளும் விற்பனை தினசேரியில் பதிவு செய்யப்படும்.
(5) சகல சந்தரப்பங்களிலும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியானது கடன்பட்டோர் பேரேடுகளின் மீதியுடன் சமப்படும். (.......)

13) வணிகமொன்று 2015.03.31 இல் ரூபா 90 000 முற்கொண்டுவரும் பெறுமதியுள்ள இயந்திரமொன்றை வழங்கி ரூபா 150 000 பெறுமதியான புதிய இயந்திரமொன்றை அன்றே பெற்றுக்கொண்டது. இதற்காக பழைய இயந்திரத்துடன் ரூபா 70 000 காசும் செலுத்தப்பட்டது. இவ் இயந்திர வழங்கலினால் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு?

(1) இலாபம் ரூபா 10 000 (2) நட்டம் ரூபா 10 000

(3) இலாபம் ரூபா 60 000 (4) நட்டம் ரூபா 70 000

(5) நட்டம் ரூபா 90 000 (.......)

- **வினா இலக்கம் 14, 15, 16 என்பவற்றுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களை பயன்படுத்துக. 2015.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கமல், விமல், சமல் பங்குடமை வணிகத்தின் தகவல்களின் சில வருமாறு**

A - கமலின் வருடாந்த சம்பளம் ரூபா 30 000

B - குறித்த வருடத்தில் கமலுக்கு காசாக செலுத்திய சம்பளம் ரூபா 18 000

C - கமல், விமல், சமல் என்பவர்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்பட்ட இறுதிப் பங்கிலாபம் முறையே ரூபா 50 000, ரூபா 50 000, ரூபா 25 000

D - விமல், சமல் என்போரின் பொருள் பற்று முறையே ரூபா 10 000, ரூபா 5 000 ஆக இருந்ததுடன் இது தொடர்பில் எவ்வித பதிவும் செய்யப்படவில்லை.

E - விமலுக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான வட்டி ரூபா 25 000 இற்கு எவ்வித பதிவுகளும் செய்யப்படவில்லை.

*14)* மேற்காட்டிய உருப்படிகளில் எவ்வுருப்படிகள் பங்காளர்களிடையே மேற்கொள்ளப்படுகின்ற இலாபநட்ட பகிர்வாகக் கருதப்படும்?

(1) A, D ஆகும் (2) A, B ஆகும்
(3) A, C ஆகும் (4) A, B, C, D ஆகும்
(5) A, B, C, D, E ஆகும் (.......)

*15)* 2015.03.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தின் சரியான தேறியலாபம் யாது?

(1) ரூபா 155 000 (2) ரூபா 145 000 (3) ரூபா 165 000
(4) ரூபா 170 000 (5) ரூபா 180 000 (.......)

*16)* மேற்தரப்பட்ட சகல தகவல்களையும் கவனத்திற் கொண்ட பின்னர் 2015.03.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்தில் பங்குடமை வணிகத்தின் உரிமையில் ஏற்பட்ட அதிகரிப்புத் தொகையாக இருப்பது யாது?

(1) ரூபா 145 000 (2) ரூபா 112 000 (3) ரூபா 137 000
(4) ரூபா 122 000 (5) ரூபா 147 000 (.......)

*17)* பின்வரும் தகவல்களின் அடிப்படையில் குத்தகைப் பெறுநரின் 2015.03.31 இலுள்ள புத்தகத்திலுள்ள மொத்தப் பொறுப்பு யாது?

| **குத்தகையின் வகை** | **நிதி** |
|---|---|
| குத்தகை ஒப்பந்த திகதி | 2014.04.01 |
| குத்தகை காலம் | 04 வருடங்கள் |
| 2014.03.31 இல் சொத்தின் நியாயமான பெறுமதி | ரூபா 1600 000 |
| வருடாந்த குத்தகைத் தவணைப் பணம் | ரூபா 600 000 |
| முதல் தவணைப் பணம் செலுத்திய திகதி | 2015.03.31 |
| *2015.03.31* இல் முடிவடைந்த ஆண்டுக்கான வட்டி | ரூபா 320 000 |

(1) ரூபா 1000 000 (2) ரூபா 1280 000 (3) ரூபா 1320 000
(4) ரூபா 1600 000 (5) ரூபா 920 000 (.......)

*18)* கடன்பட்டோர் ஒருவர் தனது மீதியைத் தீர்க்கும் போது கம்பனியொன்றின் நடைமுறை விகிதம், விரைவு விகிதம் ஆகியவைகளில் ஏற்படும் தாக்கம் என்ன?

| | நடைமுறை விகிதம் | விரைவு விகிதம் |
|---|---|---|
| (1) | அதிகரிப்பு | அதிகரிப்பு |
| (2) | குறைவு | குறைவு |
| (3) | மாற்றமில்லை | மாற்றமில்லை |
| (4) | அதிகரிப்பு | குறைவு |
| (5) | குறைவு | குறைவு |

(.......)

19) பின்வருவனவற்றில் எவை நிறுவனமொன்றில் நிகழத்தக்க பொறுப்புக்களாக வெளிப்படுத்த முடியும்?

A - வங்கியிடம் இருந்து பெற்ற கடன்

B - நிறுவனத்திற்கு எதிரான தீர்க்கப்படாத வழக்கு

C - நிதி நிறுவனமொன்றிடன் பெற்ற ஈட்டுக்கடன்

D - இன்னொரு நிறுவனத்தினால் பெறப்பட்ட கடன் ஒன்றிற்கு ஓர் உத்தரவாளராகச் செயற்படுவதற்கான உடன்படிக்கையொன்று

(1) A, B, C ஆகும் (2) B, D ஆகும் (3) A, C ஆகும்

(4) A, D ஆகும் (5) B, C ஆகும் (.......)

20) பங்குடமையின் கணக்குகளை தாயாரிப்பது தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் எது பிழையானது?

(1) பங்குடமையின் உரிமைத்துவம் மாறும்போது நன்மதிப்பானது மதிப்பிடப்பட்டு சீராக்கப்படும்.

(2) பங்குடமையின் ஒப்பந்தத்தில் சம்பளத்திற்கான ஏற்பாடு காணப்படுமாயின் பங்காளருக்கு சம்பளங்கள் வழங்கப்படும்

(3) பங்காளர்களின் பற்றுக்கள் பங்குடமையின் இலாப நட்ட பகிர்வின் போது கழிக்கப் படுவதில்லை.

(4) பங்குடமைக்குப் பங்காளரால் கொடுக்கப்படும் கடனுக்கான வட்டியானது வியாபார மொன்றின் ஒரு செலவாக இனங்காணப்படுவதில்லை.

(5) பங்குடமை ஒப்பந்தப்படி இலாப நட்டங்கள் பங்காளர்களிடையே பகிரப்படும். (.......)

21) பின்வரும் கூற்றுக்களில் எவை கம்பனி ஒன்றின் ''மொத்த முற்றும் அடங்கிய வருமானம்'' தொடர்பில் சரியானது?

A - இது வருடத்திற்கான இலாபம், ஏனைய முற்றும் அடங்கிய வருமானம் ஆகிய இரண்டினதும் மொத்தமாகும்.

B - இது குறித்தவொரு காலப்பகுதியினுள் இனம் காணப்பட்ட எல்லா செயற்பாட்டு வருமானங்களுக்கும் மொத்தச் செலவுகளுக்கும் இடையிலான வேறுபாடு ஆகும்.

C - இது குறித்தவொரு காலப்பகுதியினுள் உரிமையாளர்களால் உரிமையாளர்கள் என்ற அடிப்படையில் மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள் நீங்கலாக ஏனைய கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளால் உரிமையாண்மையில் எற்படும் மாற்றம் ஆகும்.

(1) A, B ஆகியன மாத்திரம் (2) A, C ஆகியன மாத்திரம்

(3) B, C ஆகியன மாத்திரம் (4) A மாத்திரம்

(5) A, B, C ஆகியன மாத்திரம் (.......)

22) இயக்குனர் சபையானது 31 மார்ச் 2015 இல் 100 000 சாதாரண பங்குதாரர்களிற்கு பங்கு ஒன்றுக்கு 20 ரூபா இறுதி பங்குலாபத்தை வழங்க பிரேரித்துள்ளது. இப்பிரேரிக்கப்பட்ட பங்கிலாபமானது நிதிக்கூற்றுக்களில் எவ்வாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்?

(1) செலுத்த வேண்டிய பங்குலாபம் ரூபா 2000 000

(2) செலுத்த வேண்டிய பங்குலாபம் ரூபா 100 000

(3) நிதிக்கூற்றுக்களில் குறிப்பாக மட்டும் வெளிப்படுத்தல் வேண்டும்.

(4) பகிர்வு ஒன்றாக உரிமையாண்மை அசைவுக்கூற்றில் பதிய வேண்டும்.

(5) பங்குதாரர் உரிமையின் ஒரு பகுதியாகச் சேர்த்தல் வேண்டும். (.......)

23) நடைமுறை, நடைமுறையல்லாத சொத்துக்கள் என வகைப்படுத்தப்படுவதற்கான அடிப்படையில் வழங்கும் இலங்கை கணக்கீட்டு நியமம் பின்வருவனவற்றுள் எது?

(1) இலங்கை கணக்கீட்டு நியமம் 1

(2) இலங்கை கணக்கீட்டு நியமம் 2

(3) இலங்கை கணக்கீட்டு நியமம் 8

(4) இலங்கை கணக்கீட்டு நியமம் 10

(5) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 (.......)

24) கம்பனியொன்றின் 31.03.2015 இல் முடிவடைந்த வருடத்திற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| | ரூபா |
|---|---|
| ஆதனம், பொறி, உபகரணத்தின் மீதான பெறுமானத்தேய்வு | 240 000 |
| காணி மீள்மதிப்பின் மீதான குறைவு | 100 000 |
| இயந்திர அகற்றல் மீதான இலாபம் | 65 000 |

31.03.2014 இல் முடிவடைந்த வருடத்தில் காணி மீள்மதிப்பீட்டினால் உருவாகிய மிகை ரூபா 60 000 ஆகும். மேற்படி கொடுக்கல் வாங்கல் மற்றும் நிகழ்வுகளின் காரணமாக 31.03.2015 இல் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியின் இலாபத்திலும் மொத்த முற்றுமடங்கிய வருமானத்திலும் ஏற்பட்ட தேறிய குறைவு எவ்வளவு?

| | இலாபத்தில் தேறிய குறைவு (ரூபா) | மொத்த முற்றுமடங்கிய வருமானத்தில் தேறிய குறைவு (ரூபா) |
|---|---|---|
| (1) | 185 000 | 100 000 |
| (2) | 240 000 | 60 000 |
| (3) | 240 000 | 300 000 |
| (4) | 215 000 | 285 000 |
| (5) | 215 000 | 225 000 |

(.......)

25) நிறுவனமொன்று எல்லாக் காசுப் பெறுவனவுகளைத் தினமும் வங்கியில் வைப்பிலிடுவதுடன் எல்லாக் கொடுப்பனவுகளை காசோலைகளினூடாகச் செய்கின்றது. பின்வருவன நிறுவனத்திற்கான மாதமொன்றுடன் தொடர்பான தகவல்கள் ஆகும்.

- ✶ மாத தொடக்கத்திலுள்ள வங்கிக்கூற்று, மீதி, காசுப்புத்தக மீதிகள் முறையே ரூபா 8000, ரூபா 15000 ஆகும். இம் மீதிகளுக்கிடையிலான வேறுபாடு வசூலிக்கப்படாத காசோலைகளினால் ஏற்பட்டதாகும்.
- ✶ காசுப் பெறுவனவு நாளேட்டின் மொத்தம் - ரூபா 120 000
- ✶ காசுக் கொடுப்பனவு நாளேட்டின் மொத்தம் - ரூபா 80 000
- ✶ கடன்பட்டோரிடமிருந்து பணம் சேகரிக்கும் போது அனுமதிக்கப்பட்ட கழிவு - ரூபா 8 000
- ✶ மாத இறுதியில் காணப்படும் வங்கிக்கூற்று காசுப்புத்தகம் மீதிகளுக்கிடையிலான வேறுபாட்டிற்கு ஒரேயொரு காரணமாக இருப்பது வங்கிக்கூற்றில் காணப்படும் வங்கி சேவைக் கட்டணம் ரூபா 6000 ஆகும்.

வங்கிக் கூற்றின் படி மாத முடிவிலுள்ள மீதி யாது?

(1) ரூபா 42 000 (2) ரூபா 49 000 (3) ரூபா 34 000
(4) ரூபா 44 000 (5) ரூபா 54 000 (.......)

❖ **நிறுவனமொன்றின் 2015 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 26 ஆம், 27 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| | | ரூபா |
|---|---|---|
| கடன்கொடுநருக்கு செலுத்திய காசு | | 38 000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு | | 84 000 |
| செலுத்திய செலவுகள் | | 20 000 |
| வங்கி மீதி | - 2014.04.01 இல் | 30 000 |
| | - 2015.03.31 இல் | 25 000 |
| 2 மாதகால திறைசேரி உண்டியல்கள் | | |
| | - 2014.04.01 இல் | 150 000 |
| | - 2015.03.31 இல் | 60 000 |

26) 2015 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசும் காசிற்கு சமமானவைகளில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு அல்லது குறைவு ஆனது பின்வருவனவற்றுள் எது?

(1) ரூபா 95 000 அதிகரிப்பு
(2) ரூபா 95 000 குறைவு
(3) ரூபா 5 000 அதிகரிப்பு
(4) ரூபா 5 000 குறைவு
(5) ரூபா 100 000 அதிகரிப்பு (.......)

27) முதலீட்டு நடவடிக்கைகள், நிதியீட்ட நடவடிக்கைகள் இரண்டிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்களின் மொத்தத் தொகை பின்வருவனவற்றுள் எது?

(1) ரூ 26 000 உட்பாய்ச்சல்
(2) ரூ 95 000 உட்பாய்ச்சல்
(3) ரூ 95 000 வெளிப்பாய்ச்சல்
(4) ரூ 121 000 வெளிப்பாய்ச்சல்
(5) ரூ 121 0000 உட்பாய்ச்சல் (.......)

28) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் - 02 இன் படி உற்பத்திக் கம்பனியொன்றின் இருப்புக் கிரயத்தினுள் உள்ளடங்குகின்ற விடயங்களை மட்டும் கொண்டுள்ள பட்டியல் எதுவெனில்

(1) மூலப்பொருட்கள், வெளிக்காவுகை கூலி, களஞ்சிய கிரயங்கள், இயந்திர பெறுமானத் தேய்வு
(2) நேர்க்கூலிகள், உட்காவுகைக் கூலி, வெளிக்காவுகை கூலி, மூலப்பொருட்கள்
(3) வெளிக்காவுகை கூலி, மூலப்பொருட்கள், நேர்க்கூலிகள், இயந்திர பெறுமானத் தேய்வு
(4) நேர்க்கூலிகள், வெளிக்காவுகை கூலி, களஞ்சிய கிரயம், இயந்திர பெறுமானத் தேய்வு
(5) இயந்திர பெறுமானத் தேய்வு, மூலப்பொருட்கள், உட்காவுகைக் கூலி, நேர்க்கூலிகள் (.......)

29) வரையறுத்த சில்வா பொதுக்கம்பனியின் முகாமையானது 31 மார்ச் 2015 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 31 மே 2015 இல் தயாரித்துள்ளது. இயக்குனர் சபையானது அவைகளை 20 யூன் 2015 இல் மீளாய்வு செய்து 25 யூன் 2015 இல் நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிட்டுள்ளனர். இவைகள் 10 யூலை 2015 இல் பங்குதாரர்களிற்கு கிடைக்கக் கூடியதாக விடப்பட்டுள்ளதுடன் பங்குதாரர்கள் 25 யூலை 2015 இல் அவைகளுக்கு அங்கிகாரமளித்துள்ளனர்.

இலங்கை கணக்கீட்டு நியமம் 10 இன் படி வரையறுத்த சில்வா பொதுக்கம்பனியின் அறிக்கையிடும் தினத்திற்குப் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகளை அடையாளம் காணப்பதற்குப் பிரயோகிக்கக்கூடிய கால எல்லை எது?

(1) 31 மார்ச் தொடக்கம் 31 மே 2015 வரை
(2) 31 மார்ச் தொடக்கம் 20 யூன் 2015 வரை
(3) 31 மார்ச் தொடக்கம் 25 யூன் 2015 வரை
(4) 31 மார்ச் தொடக்கம் 10 யூலை 2015 வரை
(5) 31 மார்ச் தொடக்கம் 25 யூலை 2015 வரை (.......)

30) இலங்கை கணக்கீட்டு நியமம் - 08 இற்கமைய கணக்கீட்டு கொள்கைகளின் தெரிவு, அதன் பிரயோகம் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எது சரியானது?

A - கொடுக்கல் வாங்கல் ஒன்றிற்குக் கணக்கீட்டு நியமம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் முகாமையானது கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்வதில் தமது தீர்மானங்களை எடுக்கலாம்.

B - நிறுவனமானது தெரிவு செய்யப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளைத் தொடர்ந்தும் பிரயோகிக்க வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

C - நிறுவனத்தின் கணக்கீட்டு கொள்கைகளை வெளிப்படுத்தல் அத்தியாவசியமானது அல்ல.

(1) A மாத்திரம்
(2) B மாத்திரம்
(3) C மாத்திரம்
(4) A, B ஆகியன மாத்திரம்
(5) B, C ஆகியன மாத்திரம் (.......)

31) நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் சட்டகத்தில் தரப்பட்டுள்ள வரைவிலக் கணத்திற்கமைய பொறுப்பொன்றிற்கான மூன்று பிரதான பண்புகளையும் குறிப்பிடுக.

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

32) வருமானச் செலவுக் கணக்கிற்கும் கொள்ளல் கொடுத்தல் கணக்கிற்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

.......................................................................................................................................

.......................................................................................................................................

33) பின்வரும் கூற்றுக்களில் எது "சரி" எது "பிழை" என்பதைப் பொருத்தமான நிரலில் அடையாளமிடுவதன் மூலம் காட்டுக.

| | சரி | பிழை |
|---|---|---|
| A - பரீட்சை மீதியைச் சமப்படுத்தல் என்பது எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் இரட்டை பதிவு முறையின் அடிப்படையில் சரியாகப் பதியப்பட்டுள்ளன என்பதை மட்டும் கருதாது | ...................... | ...................... |
| B - காசு பாய்ச்சல் கூற்றொன்றைத் தயாரித்துச் சமர்ப்பிக்கும் போது காசு அடிப்படை கடைப்பிடிக்கப்படுகின்றது. | ...................... | ...................... |
| C - முற்பண முறை சில்லறைக் காசேட்டின் படி ஒவ்வொரு குறிப்பிட்ட காலமுடிவில் நிலையான பணத்தொகையொன்று மீள் நிரப்பப்படுகின்றது. | ...................... | ...................... |
| D - நிறுவனத்தின் தகவல்களைப் பயன்படுத்தும் வெளிவாரியான பாவனையாளர்களினால் தீர்மானம் எடுப்பதற்கு "பொது நோக்கம் கொண்ட நிதிக்கூற்றுக்கள்" வழங்கப்படுகின்றது. | ...................... | ...................... |

34) நிறுவனமொன்றினால் ரூபா 150 000 கிரயம் கொண்ட இருப்புக்கள் "விற்பனையின்றேல் திருப்பி அனுப்புக" என்ற அடிப்படையில் ரூபா 180 000 விற்பனை விலையில் அனுப்பியதுடன் இதனை வருடத்திற்கான கடன் விற்பனை எனவும் கணக்கிடப்பட்டன. இதனடிப்படையில் இந்நிறுவனத்தின் கணிப்பிடப்பட்ட வருடத்திற்கான இலாபம் ரூபா 1 200 000 ஆகும். எவ்வாறாயினும் இலாபத்தை கணிப்பீடு செய்த பின்பே மேற்கூறிய அடிப்படையில் அனுப்பிய இருப்புக்களில் $33\,^1/_3$ % விற்பனை செய்யப்படவில்லை என்றும் கணக்காண்டு முடிவிலே இவைகளைத் திருப்பி அனுப்பும் காலம் முடிவடையவில்லையென்றும் தெரிய வந்தது. இவ்வருடத்தின் சரியான இலாபம் என்ன?

.......................................................................................................................................

35) வரையறுக்கப்பட்ட பீரிஸ் கம்பனி 200 000 சாதாரண பங்குகளை வழங்கியிருந்தது. 01.04.2014 இல் கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனக் கணக்கு மீதி ரூபா 10 000 000 மீதியாகக் காட்டியது. கம்பனியானது 01.10.2014 இல் காணப்படும் ஒவ்வொரு 5 பங்குகளுக்கும் 1 பங்கு என்ற அடிப்படையில் பங்கொன்று ரூபா 50 விலையில் வழங்கி நிறுத்தி வைத்த வருவாய்களை மூலதனமாக்கியது. மேலும் 01.01.2015 இல் காணப்படும் ஒவ்வொரு 6 பங்குகளுக்கும் 1 பங்கு என்ற அடிப்படையில் பங்கொன்று ரூபா 60 விலையில் உரிமை வழங்கல் செய்தது. எல்லாப் பங்குதாரர்களும் தமது உரிமையைப் பயன்படுத்தி யுள்ளனர். உரித்து வழங்கலுக்கான நாட்குறிப்பு பதிவுகளை எழுதுக. (விளம்பல் தேவையில்லை)

(i) பெற்ற காசுக்கு

.......................................................................................................................................

.......................................................................................................................................

(ii) பங்குகளுக்கான ஒதுக்கத்துக்கு

..........................................................................................................................................

..........................................................................................................................................

36) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு பேரேட்டு கணக்குகளையும் சொத்து பொறுப்பு, உரிமை, வருமானம், செலவு என்ற வகையில் வகைப்படுத்திக் குறிப்பிடுக.

| கணக்கின் பெயர் | வகைப்படுத்தல் |
|---|---|
| A - விற்பனைத் திரும்பல் | ........................................ |
| B - முற்பண வாடகை வருமானம் | ........................................ |
| C - நிறுத்தி வைத்த வருவாய் | ........................................ |
| D - ஐயக்கடன் ஏற்பாடு | ........................................ |

37) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பாக நிறுவனமொன்றின் பொது நாளேட்டில் பதியப்படும் கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள் நான்கினைக் குறிப்பிடுக.

(i) ..........................................................................................................................................

(ii) ..........................................................................................................................................

(iii) ..........................................................................................................................................

(iv) ..........................................................................................................................................

38) சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்கையில் கூடியவரை உறுதிப்படுத்த வேண்டிய கணக்கீட்டு தகவல்களின் பண்பு ரீதியான இயல்பினைக் குறிப்பிடுக.

..........................................................................................................................................

❖ **39 ஆம், 40 ஆம் வினாக்களுக்கு கீழ் உள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

வரையறுத்த பிரான்சிஸ் உற்பத்திக் கம்பனியில் ஏற்பட்ட மொத்த உற்பத்திக் கிரய தகவல்கள் வருமாறு

| | ரூபா |
|---|---|
| நேர்மூலப்பொருள் கொள்வனவு | 62 000 |
| உற்பத்தி மேந்தலை | 24 000 |
| நேர்ச் செலவுகள் | 15 000 |
| விற்பனை | 190 000 |
| குறைவேலை இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு | 5 000 |
| முடிவுப்பொருள் இருப்பில் ஏற்பட்ட குறைவு | 12 000 |
| மூலப்பொருள் இருப்பில் ஏற்பட்ட குறைவு | 8 000 |

**மேலதிக தகவல்கள்**

✶ உற்பத்தி மேந்தலை கணிப்பதில் மேற்பார்வையாளர் சம்பளம் ரூபா 10 000 கவனத்தில் கொள்ளப்படவில்லை

✶ பொறி இயந்திர பெறுமானத் தேய்வு ரூபா 12 000 உம் மோட்டார் வாகனத் தேய்வு ரூபா 20 000 மும் கருத்தில் கொள்ளப்படவில்லை.

✶ மோட்டார் வாகனம் முடிவுப்பொருள் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

39) மேலுள்ள மேலதிக தகவல்களைக் கருத்திற் கொள்வதற்கு முன்னரான குறித்த காலத்திற்குரிய விற்பனைக் கிரயம் யாது?

.............................................................................................................................

40) மேலதிக தகவல்களை கருத்திற் கொண்ட பின்னர் குறித்த காலத்திற்குரிய மொத்த லாபம் யாது?

.............................................................................................................................

41) வரையறுக்கப்பட்ட சிந்து பொதுக் கம்பனியின் 2015 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டில் பெறப்பட்ட வருமானவரி தொடர்பான தரவுகள் வருமாறு

| | | |
|---|---|---|
| 2014.04.01 இல் வருமான வரிக்கான ஏற்பாடு | ரூபா | 50 000 |
| 2014/2015 கணக்காண்டில் செலுத்திய வருமான வரி | ரூபா | 180 000 |
| 2014/2015 கணக்காண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமான வரி | ரூபா | 240 000 |
| 2013/2014 ற்கு இறுதி வருமானவரியென இணங்கிக் கொண்டு செலுத்திய தொகை | ரூபா | 40 000 |

(i) 2014/2015 ஆம் ஆண்டு வருமானக்கூற்றில் வரியென பிரதிபலிக்கும் தொகை யாது?

.............................................................................................................................

(ii) 2015 மார்ச் 31 இல் நிதிநிலைமைக்கூற்றில் பொறுப்பாக காட்டப்படும் வரி ஏற்பாட்டுத் தொகை யாது?

.............................................................................................................................

42) வரையறுக்கப்பட்ட பாண்டியன் கம்பனியின் வருமானக்கூற்று கீழே தரப்பட்டுள்ளது. $A, B, C, D$ ஆகிய எழுத்துக்களால் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் பிரயோகிக்கப்படும் கணக்கீட்டு எண்ணக்கருக்களை குறிப்பிடுக.

வரையறுக்கப்பட்ட பாண்டியன் கம்பனி $(A)$

2015.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்று $(B)$

| | ரூபா | |
|---|---|---|
| விற்பனைகள் | 1800 | $(C)$ |
| விற்பனைக் கிரயம் | (750) | $(D)$ |
| மொத்த லாபம் | 1050 | |
| செலவுகள் | (450) | |
| தேறிய லாபம் | 600 | |

| எழுத்து | கணக்கீட்டு எண்ணக்கருக்கள் |
|---|---|
| A | ............................................................ |
| B | ............................................................ |
| C | ............................................................ |
| D | ............................................................ |

43) வியாபாரக் கம்பனியொன்றின் பின்வரும் கொடுக்கல் வாங்கல் தொடர்பான ஒவ்வொரு காசுப் பாய்ச்சல்களையும் செயற்பாட்டு நடவடிக்கை முதலீட்டு நடவடிக்கை, நிதியீட்ட நடவடிக்கை என்பவற்றில் அவைகள் எவையென வகைப்படுத்திக் காட்டுக.

| காசுப் பாய்ச்சல் | நடவடிக்கைகள் |
|---|---|
| வட்டிக் கொடுப்பனவு | |
| குத்தகை கடன்கொடுத்தோருக்கு செலுத்தப்படும் வருடாந்த குத்தகை தவணைக் கட்டணம் | |
| காசுக்கு கொள்வனவு செய்யப்படும் மோட்டார் வாகனம் | |
| இயக்குநர்களுக்கு சம்பளம் செலுத்தியது | |

44) 2015.03.31 இல் வரையறுக்கப்பட்ட வினோ தனியார் கம்பனியின் கட்டிடங்களின் கீழ்க் கொண்டு வந்த தொகை ரூபா 400 000 ஆகக் காணப்பட்டது. இத்தினத்தில் இக்கம்பனி இதனை ரூபா 650 000 இற்கு மீள் மதிப்பீடு செய்தது. அத்துடன் சென்ற வருட கட்டிட மீள் மதிப்பீட்டுக் குறைவுத் தொகை ரூபா 150 000 அவ்வருட வருமானக்கூற்றில் அறவிடப்பட்டிருந்தது.

2015.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கட்டிடத்தின் மீள்மதிப்பீட்டு மிகை / குறையை பதிவிடுவதற்கான நாட்குறிப்பு பதவினைத் தருக. (விளம்பல் அவசியமற்றது)

..........................................................................................................................................

..........................................................................................................................................

45) உரித்து வழங்கலுக்கும் மூலதனமாக்கலுக்கும் இடையில் ஒத்த தன்மை ஒன்றையும் வேறுபாடு ஒன்றையும் குறிப்பிடுக.

ஒத்த தன்மை :- ..........................................................................................................

வேறுபாடு :- ..........................................................................................................

The National e-learning Portal for The General Education

46) விளையாட்டுக் கழகமொன்றின் 2015.03.31 இல் முடிவடையும் வருடத்தின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை அங்கத்தவர் எண்ணிக்கை 60 ஆகும். வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூபா 1200 ஆகும்.

| | 2015.03.31 இல் | 2014.03.31 இல் |
|---|---|---|
| அங்கத்துவக் கட்டணம் செலுத்தாத அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 08 | 05 |
| முற்பணமாக சந்தா செலுத்திய அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 03 | 06 |

2015.03.31 இல் முடிவடைந்த வருடத்தினுள் காசாக கிடைக்கப் பெற்ற சந்தாக் கட்டணம் எவ்வளவு?

..........................................................................................................................................

47) கம்பனியொன்றின் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 2014.04.01 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு மீதி | ரூ | 150 000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட காசு | ரூ | 500 000 |
| கடன் விற்பனைகள் | ரூ | 620 000 |
| 2015.03.31 இல் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு | ரூ | 27 000 |

2015.03.31 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி யாது?

..........................................................................................................................................

48) 2015.03.31 இல் கபி வியாபாரத்தின் தீ விபத்து ஏற்பட்டு இதனுள் இருந்த இருப்புக்களின் ஒரு பகுதி முழுமையாக அழிவடைந்திருந்தன. அழிவடையாமல் எஞ்சியிருந்த இருப்புக்களின் கிரயம் ரூபா 50 000 பின்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன.

- 2015 மார்ச் 01 இல் இருப்புக்களின் கிரயம் ரூபா 300 000
- 2015 மார்ச் மாதத்தினுள் இடம்பெற்ற விற்பனைகள் ரூபா 180 000
- மொத்தலாபம் விற்பனைக் கிரயத்தில் 25% ஆகும்.
- இக்காலத்தில் கொள்வனவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.
- *2015* மார்ச் மாதத்தினுள் இடம்பெற்ற விற்பனைத் திரும்பல் ரூபா 30 000

அழிவடைந்த சரக்குகளின் கிரயத்தைக் கணிப்பிடுக.

.............................................................................................................................................................

49) வரையறுத்த ரதீஸ் கம்பனி ஒரு பெறுமதி சேர் வரி பதியப்பட்ட கம்பனியாகும். 2015.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பெறுமதி சேர் வரி தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

எல்லாக் கொள்வனவுகளும் விற்பனைகளும் காசுக்கு மேற்கொள்ளப்பட்டன.

| | ரூபா (000) |
|---|---|
| 2014.04.01 இல் மீதி | 250 |
| காசு (விற்பனையின் போது சேகரிக்கப்பட்டவை) | 2800 |
| காசு (கொள்வனவுக்காக செலுத்தப்பட்டவை) | 1600 |
| காசு (உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தியது | 1400 |

2015.03.31 இல் உள்ள பெறுமதி சேர் வரி பொறுப்பினைக் கணிக்குக.

.............................................................................................................................................................

50) நிறுவனமொன்று உற்பத்தியில் பயன்படுத்திய பொறியொன்றினை ரூபா 600 000 இற்கு விற்பனை செய்தது. இது விற்கும் நேரத்தில் ரூ 520 000 முன் கொண்டு வரும் தொகையினைக் கொண்டிருந்தது. இவ்விற்பனை மூலம் பெறப்பட்ட காசானது புதிய பொறியொன்றை ரூபா 1000000 இற்கு வாங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது. மிகுதித் தொகையானது வங்கிக் கடன் மூலமாக தீர்க்கப்பட்டது.

மேலுள்ள நடவடிக்கைகளினால் எழுந்த பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(i) தேறிய காசுப்பாய்ச்சல் :- .............................................................................................

(ii) காசற்ற விடயம் :- .............................................................................................